தமிழ் வாழ்க.

தமிழ்ப் பொழில்

துணர் ௪௪

சாதாரண ஆண்டு

1970 – 71.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

செ. தனக்கோடி, பி. ஏ.

உள்ளுறை.

சாதாரண ஆண்டு துணர் ௪௪ மலர் ௰௧-௰௨

1970—71

		பக்கம்
1	தமிழ் எம். ஏ. வகுப்பு — ஒரு புதிய பாடத் திட்டம்	1
2	கவியரங்கக் கவிதை டாக்டர் சாலை இளந்திரையன்	163
3	கொல்லாக் கோலமும் கொள்ளாக் கோலமும்	9
4	கல்விக் கோவிலும் கடவுட் கோவிலும் திரு. K. S. மகாதேவன் எம். ஏ, பி. எசி.	86
5	இளங்கோவின் புலமைச் செல்வம்	16, 44
6	நகைக் கூட்டஞ் செய்தான் களவன் மகன்	209. 231
7	நெடுநல்வாடை திரு. K. சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ, பி. எல்.	289, 319, 362
8	இருங்கோவேளும் நற்குடி வேளாளரும் திரு. பி. இராமநாதன் பி. ஏ. பி. எல்.	25, 60, 91, 122, 143
9	மூன்று மொழிகளில் எண்ணுப் பெயர் அமைப்பு டாக்டர் இராம. சுந்தரம்	33
10	எதிர்பாராத முத்தம் - ஓர் அறிமுகம்	37
11	நேமிநாதம்	97
12	தொகையிலக்கணம் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ. டிப். லிங்	295
13	கூத்தன் பிறந்த ஊர் புலவர். திரு சி. கோவிந்தராசனர்	53
14	உரிச்சொல் - ஒரு ஆய்வு	65

15 திராவிட மொழிகளில் பால் - எண் வேறுபாடு 129

16 நிகழ்காலத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 180

17 திராவிட மொழிகளில் எண் வேறுபாடு 263
டாக்டர் மோ. இசரயேல்

18 தமிழில் கூத்தமைதி 74, 116, 137, 197
திரு. ப. சுந்தரேசன், குடந்தை

19 கோத்தர் மொழியில் மூவிடப் பெயர்கள் 80
திரு. கோ. சுப்பையா

20 தெய்வந்தொழும் கற்பு 102

21 சங்கமனம் மதித்த பூத்தலைமகளிர் 235, 270
திரு. இர. குழந்தைவேலு எம். ஏ.

22 தமிழிலும் ஆங்கிலத்திலும் பழமொழி ஒப்புமை 106

23 திராவிட மொழிகளில் பழமொழி ஒப்புமை 284, 315
பேராசிரியர் வ. பெருமாள் எம் ஏ. பி. டி.

24 மலை 112

25 புகார்ச் செலவு 193

26 இயேசுவும் சிலுவையும் 259
திரு. சோம. செல்வகுமார் எம். ஏ.

27 மூன்றுவது உலகத் தமிழ் மாநாடு 113
திரு. செ. இர. செயச்சந்திரன் எம். ஏ. டி. பி. ஈ. டி.

28 மேகலைத் தமிழ் 154

29 வாழ்க்கைத் திறனுய்வு 372
திரு. புலவர். தி நா. அறிவு ஒளி

30 இலக்கியமும் பண்பாடும் 204
திரு. அ. இராமசாமி எம். ஏ. பி. டி.

31 இலக்கியச் சிந்தனைகள் - புறநானூறு 216
,, ,, - ஐங்குறுநூறு 327
திரு. அ. தட்சிணாமூர்த்தி பி. ஏ. (ஆனர்சு) பி எட்.

32 தமிழில் வாழ்க்கை வரலாறு - ஒரு கண்ணோட்டம் 224
திருமதி. சாலினி இளந்திரையன் எம். ஏ. எம். லிட்.

33 இரண்டு தமிழ் விகுதிகளின் தோற்றம் 253
34 ஆய்தத்தின் வரலாறு 335
திரு. இரா. கோதண்டராமன் எம். ஏ.

35 தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும் 280, 308, 350
திரு. சா. குருமூர்த்தி எம். ஏ. எம். லிட்.

36 திருக்குறட் கருவூலம் 300, 343
நக்கீரன் வழியடிமை வித்துவான்
பி. மா. சோமசுந்தர முதலியார்

37 'பெருங்கதை'ப் பெயராய்வு 354
திரு. இரா. இளவரசு, க. மு.

38 பொழிற்றொண்டர் குறிப்புகள்

பொழிலன்பர்கள் சுவைக்க 24, 52, 101, 115, 121, 258

கையறவு 142, 283

மதிப்புரை 262

விழாக்கள் 161, 191, 370, 371

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௰௧	மலர்
௪௪	சாதாரண, சித்திரை	௧
	(1970 — ஏப்ரல் — மே)	

தமிழ். எம். ஏ. வகுப்பு

ஒரு புதிய பாடத் திட்டம்

திரு. சாலை இளந்திரையன் எம். ஏ., எம். லிட்.,

0. எம். ஏ., போன்ற உயர் பட்டப்படிப்பு, பொதுப் படையான கல்வியினின்று வேறுபட்ட தனிநோக்கும் பயனும் உடையதாகவும் இன்னும் ஆழ்ந்ததாகவும் நடைபெற வேண்டும் என்னும் எண்ணத்திலேயே இந்தத் திட்டம் தரப்படுகிறது.

1. 1, ஆண்டு தோறும் பல (தமிழ் இலக்கிய) எம். ஏ. பட்டதாரிகளை உருவாக்குகிறோம். இவர்களில் பலர், ஒரு கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் ஆசிரியப்பொறுப்பு ஏற்றுத் தம் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லுவதோடேயே தமது பணி முடிந்து விட்டதாக எண்ணி அமைகின்றார்கள். எம். ஏ. வகுப்பில் படித்த இலக்கியத்தைப் பற்றி மேலும் சிந்திக்கவோ ஆராயவோ அவர்களில் பெரும்பாலருக்கு எண்ணமுமில்லை; வாய்ப்பும் இருப்பதில்லை.

1. 2. மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லுதலிலும், பெரும் பாலான எம். ஏ. பட்டதாரிகள், பாட்டுக்குப் பொருள் சொல்லுதல் என்ற அளவோடு தங்கள் கடமையை முடித்துக் கொள்கிறார்கள். "இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சி" என்பதை இவர்களே படித்திருந்தாலும், தாங்கள் கற்றுக் கொடுக்கும் இலக்கியம் எந்த வாழ்வை எப்படி ஆராய்கிறது என்று இவர்களில் பெரும்பாலோர் சிந்திப்பதே இல்லை. எனவே அந்த இலக்கியம் வழங்கும் சமுதாயச் செய்தி எதையும் அவர்கள் கண்டறிந்து கற்றுக் கொடுப்பதும் இல்லை.

இதனாலேயே, "இலக்கியத்தால் என்ன பயன்? இலக்கியத்தை ஒருவன் ஏன் கற்க வேண்டும்?" என்னும் கேள்விகள் இன்று பரவலாக எழுகின்றன.

2. 1. இந்தக் கேள்வியை எழுப்பியுள்ள இன்றையச் சூழ்நிலைக்கு யாரோ சில தமிழ் எம். ஏ. பட்டதாரிகளே காரணம் என்று சொல்லமுடியாது. நாம் வகுத்து நடத்திவருகிற எம். ஏ. பாடத்திட்டமே இதற்குக் காரணம்: தோராயமாகக் கணக்கிட்டாலும் நமது எம். ஏ. பட்டதாரிகள் சுமார் 3000 ஆண்டுக் காலத் தமிழ் இலக்கியம் அனைத்தையும் படிக்க வேண்டியுள்ளது; அவைகளை இரண்டு ஆண்டுகளிலேயே படிக்க வேண்டியுள்ளது. நமது 3000 ஆண்டு இலக்கிய வரலாறு, சமயச் சார்பற்ற சங்க இலக்கியம், சமய இலக்கியம், காவியம், சிற்றிலக்கியம், உரைநடை இலக்கியம் எனப் பல்வேறு வகைப்பட்டதாக உள்ளது. இலக்கிய வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் வேறுபட்ட இந்த இலக்கியங்களுக்குப் பின்னணியாக நமது சமுதாய வாழ்வும் பற்பல வரலாற்று மாறுதல்களை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறது. சங்கக்கால வாழ்வும் சமயக்கால வாழ்வும் ஒரே விதமாக இல்லை; சமயக்கால வாழ்வும் தற்கால வாழ்வும் ஒரே விதமாக இல்லை. உள்ளுக்குள்ளேயே ஏற்பட்ட மாறுதல்களாலும், சங்ககாலத்துக்கு முன்பிருந்து இன்றுவரை ஏற்பட்டு வந்துள்ள வெளிநாகரிகத் தொடர்பு / தாக்கம் (Influence) முதலியவைகளாலும், அவ்வப் போதைய தமிழ்வாழ்வு பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது. இந்தப் பல்வேறு சமுதாய மாறுதல்களையும் அவையவை தோற்றுவித்த இலக்கியங்களோடு பொருத்திப் பார்த்துப் பயில வாய்ப்புப் பெறுகின்றவர்களே முழுமையான இலக்கியப் பயிற்சி பெற்றவர் ஆவார்கள்.

2. 2. சங்கக்காலம் தொடங்கி இன்றுவரை உள்ள 3000 ஆண்டு இலக்கியம் முழுவதையும் பாடமாக வைத்து, அதற்கே நாம் எம். ஏ., பட்டம் வழங்குவதால், எந்த எம். ஏ., பட்டதாரியும் தமிழின் எந்த ஒரு காலத்திய இலக்கியத்தையும் முழுமையாகப் பயில முடியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக நுனிப்புல் மேயவே இந்தப் படிப்பு வாய்ப்பளிக்கிறது. எதிலும் அவர்கள் ஆழ்ந்து செல்ல முடியாததால், தாங்கள் படித்திருப்பது இலக்கியம், அது பல்வேறு நிலையினவாகிய வாழ்க்கை முறைகளின் ஆய்வு என்னும் எண்ணம் இந்த எம். ஏ., மாணவர்க்கு உண்டாகவே இல்லை.

3. 1. இந்த நிலையை மாற்றி, எம். ஏ. மாணவர்களுக்கு இலக்கிய விழிப்பை உண்டாக்க வேண்டுமானால், இப்போது படிப்பது போல அகலத்தில் செல்லாமல், எடுத்துக்கொண்ட ஒன்றை அவர்கள் ஆழ்ந்து கற்க வகைசெய்ய வேண்டும். அதாவது, பலகாலப் பட்டதும் பலவகைப்பட்டதுமான தமிழ் இலக்கியத்தைக் கால அடிப்படையில் சங்கத்தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத்தமிழ் என்ற வகையில் மூன்றாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு எம். ஏ. படிப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதன்படி எம். ஏ. (தமிழ்மொழி-இலக்கியம்) என்றுள்ள இன்றைய மொத்த நிலை மாறி, எம். ஏ. (சங்கத்தமிழ்), எம். ஏ. (இடைக்காலத் தமிழ்), எம். ஏ. (தற்காலத் தமிழ்) என்னும் மூன்று வேறு எம் ஏ. வகுப்புக்கள் உண்டாகும். ஒவ்வொரு பிரிவு எம். ஏ. மாணவரும், தமிழ் இலக்கிய இலக்கண வரலாறுகளைப் பொதுப்படவும், தாங்கள் சிறப்பாகப் பயிலும் காலப்பகுதியின் இலக்கிய இலக்கணங்களை ஆழமாகவும் படிப்பார்கள்.

3. 2. இவ்வாறு பிரிப்பதற்கு வேறொரு காரணமும் உள்ளது: சங்கக் காலத்திலும் அதற்கு முன்பும் தமிழர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையே வணிகத் தொடர்பு இருந்திருக்கிறது; இடைக்காலத்தில் வடமொழி இலக்கியங்களோடும் அவை விளக்கிய பண்பாட்டோடும் தமிழர்களுக்குத் தொடர்பு இருந்திருக்கிறது; தற்காலத்திய வாழ்வும் இலக்கியமும் மேலைநாட்டுத் தொடர்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று வேறு காலக்கட்டங்களையும் தனித்தனியே ஆராயும்போது அவ்வக்காலத்திய வெளித்தொடர்புகளை ஆராயலாம்; அவைகளால் நமது வாழ்வும் இலக்கியமும் (அல்லது நம்முடையவற்றால் அந்த வெளியாரின் வாழ்வும் கலைகளும்) எந்த அளவு மாறுதலுக்கு உட்பட்டன என்பதைத் தெளிவாக ஆராயவும் இதிலே நிறைந்த வாய்ப்பு இருக்கிறது.

3. 3. 1. சான்றாக, நமது பழைய சமுதாயம் புலவர்களை மதித்த சமுதாயம்: புலவர்களால் பாடப்படுதலை நமது மன்னர்கள் பெரும் பேறாகக் கருதினார்கள்.[1] முரசு கட்டிலில் அறியாது ஏறிய மோசிகீரனாருக்கு மன்னனே கவரிவீசினான் என்று படிக்கிறோம்.[2] கிரேக்க மன்னன் ஒருவன் அண்டை நாடாகிய சைராகூசை (கி. மு. 415இல்) வென்று அங்கிருந்த எல்லோரையும் சிறைப்படுத்தினான். சிறைப்பட்டவர்களை விடு

(1) புறநானூறு: 75 (2) புறநானூறு: 50

விப்பதற்கு அவன் விதித்த நிபந்தனை நமது மன்னர்களையே நினைவூட்டுகிறது: 'சிறைப்பட்ட மக்களின் மொழியில் நாடக மேதையாக விளங்கிய யூரிப்பைட்சின் நாடகம் ஒன்றில் ஏதாவது ஒரு பகுதியின் சில அடிகளை மனப்பாடமாகச் சொல்லக்கூடியவர் களுக்கு விடுதலை'' என்று அறிவித்தானும் அந்த மன்னன்![3]

3, 3. 2. நமது சங்கச் சமுதாயத்தில் காதலைப் பொறுத்த வரை மகளிர்க்கு இருந்துவந்த உரிமைகளைக் கண்டு வியக்கிறோம். ஆனால், ஆடவர்களின் பரத்தைமை ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல்பதைத்துக்குமுறும் குடும்பப் பெண்களைக் கண்டு திகைக்கிறோம்.[4] அதற்குக் காரணமான சமுதாயத் தேவை நமக்குத் தெளிவாக விளங்கவில்லை. கிரேக்கர்கள் இலக்கியம் மட்டுமல்லாமல் வரலாறு, தத்துவம், அரசியல் முதலிய பலதுறைகளிலும் நூல்கள் செய்திருக்கிறார்கள். அவர் களின் சமுதாயத்தில் பல்வேறுகாலங்களில் பெண்களுக்கு இருந்துவந்த உரிமைகளும் அவற்றின் காரணங்களும் அந்த நூல்களில் தெளிவாகப் பேசப்படுகின்றன. அரசியல் அறிஞன் ஒருவன் அக்காலப் பெண்களின் நிலையைப் பின்வருமாறு விவரிக்கிறான்: ''ஆண்களாகிய நமக்கு இன்பம் தரப் பரத்தையர் இருக்கிறார்கள்; நம் உடம்பைப் பேணப் பின்முறை மனைவியர் இருக்கிறார்கள்: நம் வீட்டுக் காரியங்களைக் கவனிக்கவும் நமக்கு நன்மக்களைப் பெறவுமே மனைவியர் இருக்கிறார்கள்.[5] நமது சங்கக் காலத்திலும் சற்றேறக் குறைய இதே நிலைமையே இருந் திருப்பதாகத் தெரிகிறது. பல வகைப் பரத்தையர், பின்முறை வதுவைப் பெதும்பை முதலியவர்களைப் பற்றிப் படிப்பதோடு, மனைவி ''புதல்வன் தாய்'', ''சிறுவன் தாய்'' என்றெல்லாம் குறிப் பிடப்படுவதையும் பார்க்கிறோம்.[6]

3, 3. 3, ''முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரீகர்'' என்று[7] நமது இலக்கியத்தில் படிக்கையில், தயங்காது நஞ்சுண்டு இறந்த சாக்கிரடீசின் (கி. மு. 469—399) நினைவு வருகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சொன்னவன் தமிழனே என்று மகிழ்வு

(3) Will Durrant: The Life of Greece (1939). P. 419

(4) குறுந்தொகை: 45, 309

(5) The Life of Greece (1939) P 304

(6) ஐங்குறு நூறு: 90, 405, 442;
குறுந்தொகை: 8, 45; அகநானூறு: 6

(7) நற்றிணை: 355

பொங்குகிறோம்; சற்றேறக் குறைய அதே காலத்தில், ரோமானிய நாட்டு,செனேகா (கி. மு. 3-கி. பி. 65) என்பவர் "எல்லா மக்களின் நாடுகளும் என் தாய்நாடுகள், என் நாடு எல்லாமக்களுக்கும் தாய்நாடு" என்று சொல்லியிருப்பதைப் பார்க்கையில் நமக்கு வியப்பு உண்டாகிறது.[8] 'இந்த இரண்டு பகுதி மக்களுக்கும், பல வகையிலும், நெருங்கிய தொடர்பு இருந்திருக்குமோ?' என்ற அய்யமும் உண்டாகிறது.

3. 4. பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் (கிரேக்கரின்) நகர அரசுகளில் வாழ்ந்ததால் குறுகிய மனப்பான்மை உடையவ ராயினர். ஸ்டாயிக்வாதிகள் ரோமானியப் பேரரசில் வாழ்ந்த தால் அன்னோர் விரிந்த மனப்பான்மையடைந்தனர் என்று ஆய்வாளர்கள் (திருவள்ளுவர்: பக், 36) கூறுகிறார்கள். இத் தகைய வரலாற்று ஆராய்ச்சிக்குக் கிரேக்க ரோமானிய இலக்கியங் களில் இடம் உள்ளது. நமக்கு வரலாற்று நூல்கள் இல்லாத தால் அத்தகைய ஆராய்ச்சிக்கு வாய்ப்பு இல்லை. ஆனாலும், "ஒரு காலத்திய வாழ்க்கைமுறை அக்காலத்திய இலக்கியத் துக்கும் கலைகளுக்கும் பின்னணியாக அமைகிறது" என்னும் நோக்கில், (கிரேக்க, ரோமானிய இலக்கியப் பின்னணியில்) நமது பழைய இலக்கியங்களை ஆராய்ந்தால் நமது வரலாற்றை ஓரளவு தெளிவாக உணர வழி பிறக்கலாம்.

4. 1. நமது இலக்கியம் முழுவதிலும், இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தும் முகமாக, ஒவ்வொரு கால இலக்கிய எம். ஏ., மாணவரும் அவ்வக்காலங்களில் நம்மோடு தொடர்பு பட்டிருந்த நாட்டவரின் இலக்கியங்களையும் நமது தமிழக வரலாறு, புதைபொருள் ஆய்வு, கல்வெட்டு முதலியவைகளையும் இவ்வகுப்புக்களில் கற்க ஏற்பாடு செய்ய வேண்டும். (இவ்விதமாக அமைந்த மூன்று தமிழ் எம். ஏ., வகுப்புக்களுக்கான பாட அமைப்புத் திட்டம் பின் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.)

4. 2. மனிதசமுதாயம் உலக ஒற்றுமை என்னும் இலக்கை நோக்கி இயங்குகிறது. தமிழர்களாகிய நாமும், உலகின் பிறபகுதி நாகரிகங்களைக் கண்டறிந்து, உலக நாகரிகத்தில் நமது பங்கு என்பதைக் கணித்து உலகுக்கு விளக்க வேண்டும். 'மறை வாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை!' இல்லை

---

(8) தனிநாய அடிகள்:
திருவள்ளுவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1961)
மேற்கோள்: பக். 37

இதைச் செய்வதற்கு இப்போது உள்ள எம். ஏ., படிப்பு உதவவில்லை; அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் ஆய்வுகளும் போதா. உலக இலக்கியங்களோடு அவ்வக்காலத்திய நமது இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து நமது இலக்கியங்களின் சிறப்பை முழுமையாக அறிந்து அதனை உலகுக்கு உணர்த்தவும், உலகினரிடமிருந்து தேவையானவற்றை நம் தமிழர்க்குக் கொண்டுதரவும் பெருந்தொகையினரான ஆய்வாளர்கள் வேண்டும். தமிழ் எம். ஏ., (பட்டப்) படிப்பை ஆழமுடையதாக்கினல்தான் இந்த நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கையிலேயே இந்தத் திட்டம் தரப்படுகிறது.

பின் இணைப்பு.

புதிய (மூன்று) எம். ஏ., வகுப்புக்களுக்குரிய பாட அமைப்பு (மாதிரி)த் திட்டம்.

(1) எம். ஏ., சங்கத்தமிழ்

1. இலக்கிய வரலாறு (பொது)
2. சங்க இலக்கியச் சிறப்பு வரலாறு
3. சங்க இலக்கியம்,
4. இலக்கிய திறனாய்வு
5. இலக்கணம்: தொல்காப்பியம்
6. துணைப்பாடங்கள் (1):

   (அ) கிரேக்க / ரோமானிய இலக்கிய வரலாறு

   (ஆ) கிரிக்கு / இலத்தீன் மொழி (விருப்பப்பாடம்)
7. துணைப்பாடங்கள் (2):

   (அ) மானுட இயல்

   (ஆ) சங்கக்காலத் தமிழக வரலாறு

   (இ) புதைபொருளாய்வு (விருப்பம்)

(2) எம். ஏ., இடைக்காலத் தமிழ்

1. இலக்கிய வரலாறு (பொது)
2. இடைக்கால இலக்கியச் சிறப்பு வரலாறு
3. பக்தி இலக்கியம் / காவியங்கள்

4. இலக்கியத் திறனாய்வு
5. இலக்கணம்: தொல்காப்பியம், தண்டி முதலியன
6. துணைப்பாடங்கள் (1);
   (அ) வடமொழி இலக்கிய வரலாறு
   (ஆ) வடமொழி / பாலி (விருப்பப்பாடம்)
7. துணைப்பாடங்கள் (2):
   (அ) மானுட இயல்
   (ஆ) இடைக்காலத் தமிழக வரலாறு
   (இ) கல்வெட்டு / புதைபொருளாய்வு (விருப்பம்)

(3) எம். ஏ., தற்காலத்தமிழ்

1. இலக்கிய வரலாறு (பொது)
2. தற்கால இலக்கியச் சிறப்பு வரலாறு
3. தற்கால இலக்கியம்
4. இலக்கியத் திறனாய்வு
5. இலக்கணம்: நன்னூல் முதலியன
6. துணைப்பாடங்கள் (1):
   (அ) ஆங்கில இலக்கிய வரலாறு
   (ஆ) ஆங்கிலம் (விருப்பப்பாடம்)
7. துணைப்பாடங்கள் (2):
   (அ) மானுட இயல்
   (ஆ) சமுதாய இயல்
   (இ) தற்கால அரசியல் (விருப்பம்)

குறிப்பு: பி. ஏ., வகுப்பில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றவர்களையே இந்த எம். ஏ., வகுப்புக்களில் சேர்ப்பது என்று இருந்தால் பொது இலக்கண இலக்கிய வரலாறுகளை **பி.** ஏ.. வகுப்பிலேயே கற்றுக்கொடுத்து விட வேண்டும்,

(1969 மே இறுதியில் மதுரையில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முதலாவது கருத்தரங்கில் வழங்கிய கட்டுரை)

இலக்கியக் கூட்டம்.

15—6—70 திங்களன்று மாலை 6 - மணியளவில்

கரந்தைத்

தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில்

இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்வுறும்.

சொற்பொழிவாளர்கள் :

திரு. சாலை. இளந்திரையன் — "பாரதி ஏந்திய தீப்பந்தம்"
எம். ஏ., எம், லிட். அவர்கள்

திருமதி. சாலினி இளந்திரையன் — "சமுதாய நோக்கில் தமிழ் இலக்கியம்"
எம். ஏ., எம். லிட். அவர்கள்

தமிழ்ப் பேரன்பர்கள் வந்திருந்து சிறப்பிக்க விழைகின்றோம்.

பழைய கிரேக்க இலக்கியங்கள் மற்றும் நூல்களைக் கொண்டே அந்தச் சமுதாயத்தைப் பற்றிய மிக விரிவான நூல்களை மேலைநாட்டினர் எழுதியுள்ளனர். அஃதேபோல நமது சங்ககாலத் தமிழ் வாழ்வின் பலகூறுகளையும் தெளிவாக விளக்கும் ஆய்வுப் பெருநூல் எழுதி வெளியிட வேண்டும் என்பது திரு. சாலை. இளந்திரையன் அவர்களின் திட்டம் இதற்குத் துணைவரத் தக்கக் கருத்துக்களை வழங்கக் கூடிய இலக்கண, இலக்கிய, கல்வெட்டு மற்றும் கலைகள் தொடர்பான ஆய்வாளர்களை அவர் சந்திக்க விரும்புகிறார். இத்தகைய அறிஞர்களோடு கலந்துரையாடி அவர் மேற்கொண்டுள்ள பணியில் அவரவர் துறையின் ஒத்துழைப்பை எந்தஅளவு பெறமுடியும் என்பதை அறிய விரும்புகிறார். ஆகவே தமிழறிஞர்கள் தங்கள் கருத்தினைத் தெரிவிக்க, இதனையே அழைப்பாக ஏற்று 15—6—70 திங்களன்று பிற்பகல் மூன்று மணியளவில், சங்கத்திற்கு வந்துதவ வேண்டுகிறோம். அன்பர்கள் தங்களின் வருகையை முன்னரே தெரிவிக்க விரும்புகிறோம்.

—ஆசிரியர்

கொல்லாக் கோலமும் கொள்ளாக்கோலமும்!

திரு. கே. எஸ். மகாதேவன், எம். ஏ., பி. எசி.

"சேரன் களம் புகுந்த போது கனகனும் விசயனும் தவ வேடம் தரித்துத் தப்பி ஓட முயன்றனர் ஆயினும் அவர்கள் பிடி பட்டார்கள்" எனப் பலர் எழுதுவதைக் காண்கின்றோம் இவ்வாறு எழுதுவது கனக விசயரைச் சிறுமை படுத்துவதற்கா அன்றிச் செங்குட்டுவனின் வடபுல வெற்றியைக் குறைத்துக் காட்டுவதற்கா என்று அறிஞர்கள் எண்ணியும் பார்ப்பதில்லை! இன்னும் சிலர் "தோற்றோடித் துறவிகளான கனக விசயரைக் கைப்பற்றி அவர் தலையில் கல்லேற்றும் சிறியர் செயலைச் செய்கிறான் செங்குட்டுவன்" என்று கண்ணீரும் வடிக்கின்றனர்! வாலியை மறைந்து நின்று கொன்ற இராமனை நினைந்து கண்ணீர் விடுவதிலாவது பொருளுண்டு எனலாம். வஞ்சினம் வாய்க்கப்பெற்று வெஞ்சினம் போக்கிய வானவர் தோன்றலை எண்ணிக் கலங்குவது தான் நமக்கு விளங்காத புதிராக இருக்கின்றது!

வில்லை முறித்த வீரனும், சொல்லை முறித்த சேரனும்

"வில்லை எடுத்து வளைத்தவனுக்கு மிதிலைச் செல்வி உரியவள்" என்று சனகன் விளம்பரம் செய்திருந்தான். வில்லை நாணேற்றிச் சீதையைப் பெற எவனும் முன் வரலாம் என்பதே விளம்பரத்தின் பொருள். இருப்பினும் தென்னிலங்கை மன்னன் ஏனோ முயல்வதற்கு முன் வரவில்லை. ஆனாலும் அவன் வில்லை முறித்துச் சீதையைப் பெற்ற இராமனது வெற்றியில் சிறுமைகாண முற்பட்டான்! "உன் வில்லிறுத்து, ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டிச்" சிறியர் செயல் செய்த ஓர் இராமனைக் கற்பித்து மகிழ்கின்றான். நாம் இராமன் வில்லை எடுத்தது கண்டிருக்கின்றோம்! இற்றதையும் கேட்டிருக்கின்றோம்!! இராவணனோடு சேர்ந்து மகிழ்வதற்கு ஆராய்ச்சியாளர் எவரும் முன் வருவதில்லை!! வில்லை முறித்த இராமனிடம் நெருங்க விரும்பாத ஆராய்ச்சியாளர்கள் ஏனோ காவா நாவினரின் சொல்லை முறித்து வெற்றிகண்ட சேரனிடம் சொற்சிலம்பமாட வருகிறார்கள்! இமயத்தில் இலச்சினை பொறித்து மீண்ட தென்தமிழ் நாட்டு வேந்தர் மூவரையும் சேர்த்தே கனக விசயர் ஏளனச் சொல் எழுப்பினர். அவர்தம் சொல்லை முறித்து நல்ல பாடம் கற்பிக்கச் சோழனும் முன் வந்திருக்கலாம் பாண்டியனும்

முயன்றிருக்கலாம். ஆனால் சோழநாட்டில் கரிகாலனோ! பாண்டி நாட்டில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனோ அப்பொழுது இல்லை. பெயர் தெரியாத மன்னர்களே அங்கு அரசு கட்டிலில் அமர்ந்திருந்தனர். தமிழகத்தின் சார்பில் இமயமன்னரது நாவை அடக்கும் வாய்ப்பு 'இமயத்து வானவர் மருள மலையில் பூட்டிய வானவர் தோன்றல்' செங்குட்டுவனுக்கே இருந்தது. இந்த ஏக்கத்திலிருந்து சோழ பாண்டியர்கள் விடுபட்டு மீள்வதற்குள் கனக விசயர்களை அவர் கண் முன் கொணர்ந்து நிறுத்தினன் சேரன்! நாமமது தமிழரெனக் கொண்டு அரியணையை அணி செய்திருந்த அவர்கள் என் செய்வார்கள்? செங்குட்டுவன் வெற்றியில் குறை காண முற்பட்டனர்! சொல்லை முறித்த சேரனின் வெற்றியில் வெறுப்புக் காட்டும் சோழ பாண்டியர்கள் வில்லை முறித்த வீரனின் வெற்றியில் வெறுப்பைக் காட்டும் இலங்கையர் கோனது உள நிலைக்கே இறங்கி விட்டனர்! இந் நிலையில்.

"கொல்லாக் கோலத்து உயிருய்ந்தோரை
வெல்போர்க் கோடல் வெற்றமன்று
(நடுகல். 92 - 93)

" தவப் பெருங்கோலம் கொண்டோர் தம்மேல்
கொதியழல் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது ...." (நடுகல். 105 - 107)

என்ற அவர்தம் பொருளற்ற பேச்சு நமக்கு அவர்பால் இரக்கத்தையே எழுப்புகின்றது!

எடுத்தது காண்கின்றோம்!

இருபெரும் வேந்தர்கள் எடுத்துக்காட்டும் இந்தப் போர் முறை அறத்தை இமிழ் கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய செங்குட்டுவன் அறிய மாட்டான் என்று எண்ணுவது பேதமையே! கங்கைக் கரையில் நிகழ்ந்த பெரும் போர் அதற்கு முன்னர் நாட்கணக்கில், மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் நடந்த இதிகாசப் போர்களை யெல்லாம் பெருமையில் பின்னேடச் செய்து விட்டது! காலச் சுருக்கமும், வீரப் பெருக்கமுமே செங்குட்டுவன் செய்த போரின் சிறப்பியல்பு களாகும். கனகவிசயர் என்ன கோலம் கொள்ளத் திட்டம் தீட்டினர் என்ற ஆராய்ச்சி இங்கு வேண்டுவதில்லை. ஆனால், அவர்கள் போர்க்கோலம் விடுத்து வேற்றுக் கோலம் புனைவதற்கும்

கூடச் செங்குட்டுவன் நிகழ்த்திய போரில் நேரமில்லை என்பது மட்டும் வெள்ளிடைமலை! ஆம், போரின் முடிவை

"வாய் வாள் ஆண்மையின் வண்டமிழ் இகழ்ந்த
காய் வேல் தடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத்திருவர் கடுந்தேராள ரொடு
செங்குட்டுவன் தன் சினவலைப் படுதலும்"

என இளங்கோவடிகள் தெளிவாகக் கூறிவிட்டார். கனக விசயரின் அகன்ற கைகளிலே சினம் உமிழும் வேல்களைக் காண்கின்றோம். படை ஏந்திய போர் மன்னர்களாகவே அவர்கள் செங்குட்டுவனிடம் சிக்குகின்றனர். இனி எப்பொழுது இவர் துறவிக்கோலம் கொள்ளப் போகிறார்? இதோ மற்றொரு காட்சி. ஆம்

"வடபேர் இமயத்து வான்தரு சிறப்பின்
கடவுள் பத்தினிக் கற்கால் கொண்டபின்
சினவேல் முன்பின் செருவெங் கோலத்துக்
கனகவிசயர் தம் கதிர் முடியேற்றி"

வஞ்சினம் நிறைவேற்றிய செங்குட்டுவன் தன் வெஞ்சினத்தைப் போக்கிக் கொள்கின்றான். இங்கும் நாம் கனகவிசயரைக் காண்கின்றோம், அவர் மன்னர் கோலத்திலேயே இருக்கின்றனர். என்பதை அவர் தலைமேல் உள்ள 'கதிர் முடி' ஒளிவீசிக் காட்டுகின்றது. ஆம். கண்ணுடையார் அனைவரும் கனகவிசயர் தம் கதிர் முடியே கண்ணகிக்கான கல்லை எடுத்ததைக் காண்கின்றோம்.

இற்றது கேட்கின்றோம்!

இனிக் காண முடியாதவரின் செய்தி என்ன என்ற கேள்வி எழுகின்றது! அவர்கள் காதுகளைப் பயன்படுத்தி உண்மை அறிவதை யாரும் தடுக்கவில்லை. இதோ நாவல் அந்தணன் மாடல மறையோன் அவருக்கு நலம்புரியும் கொள்கையனாக உதவ முன் வருகின்றான்! பகைப்புல மன்னர் பலர் ஆங்கு அறியாத நகை மொழியை அவன் பேசுவது நமக்கு மட்டும் நன்றாக விளங்குகின்றது. ஆம் நாம் தமிழ்ப் புல மன்னர்கள்!

".... ... ... மாதவி மடந்தை
கானல் பாணி கனக விசயர் தம்
முடித்தலை நெரித்தது!

இதற்கும் மேலாக என்ன சான்று வேண்டும்? கனக விசயரின் கதிர் முடியோடு கூடியிருக்கும் தலை 'நெறு நெறு' வென நெரிகின்ற ஒலி நாவலந்தீவின் தெற்குக் கோடியில் உள்ள நம் காதிலும் நன்குகத் கேட்கின்றதே! ஆம் எடுத்தது காண முடியாதவர்களும்கூட இப்பொழுது இற்றதைக் கேட்கின்றனர்! எனவே,

"... ... ... கோவலன் மனைவி

வடதிசை மன்னர் மணிமுடி ஏறினள்"

என்பதை ஒப்புக்கொள்வதில் எந்தச் சிக்கலும் எவருக்கும் இனிமேல் இருக்க முடியாது.

தழல் நிறம் கொண்ட தாமரை!

அயல் மன்னர் தமிழ்ப் பண்பாட்டைத் தமிழரது வீரத்தைப் பழித்த காலத்துச் செயல்பட வாய்ப்பில்லாமல். இட்டு வைத்த அரியணைகளில் காட்சிப்பொருளாகக் கிடந்த சோழ பாண்டியருக்குக் காட்சிப் பொருளாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட கனக விசயரிடம் இரக்கம் ஏற்பட்டது. உளவியலார்க்கு ஒரு வேளை உடன் பாடாக இருக்கலாம்! ஆனால் உண்மைக்கு முற்றிலும் மாறாகக் கொல்லாக் கோலத்தை-கனக விசயர் என்றுமே கொள்ளாக் கோலத்தைக் - கொண்டிருந்த போதே அவர்களைச் செங்குட்டுவன் சிறைப்பிடித்தான் என்று மாபெரும் மன்னர்கள் பேசுவது காண நம் போன்ற எளியவர் கண்களும் சிவக்கின்றனவே! ஆரிய நாட்டு அரசு ஓட்டி அவர் 'முடித்தலை' அணங்காகிய பேரிமயக்கல் சுமத்திப் பெயர்ந்த செயல் வீரன் செங்குட்டுவனின் "தாமரைச் செங்கண் தழல் நிறம் கொண்டதில்" வியப்பதற்கு என்ன இருக்கின்றது? தவறு பேசியவர்கள் தமிழரே என்ற கண்ணோட்டத்தால் அவன் கொண்டசீற்றம் சீரொழுகுசான்றோரின் சினமாக, சிரிப்பொலியாக மாறிக் காற்றில் கலந்த அருமையே நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

குருதிக் கண்ணீர் வடிக்கின்றோம்!

இலங்கை வேந்தன் பேசுகின்றான் என்பதற்காக மிதிலை வில்லில் ஊனங்காண முயலலாமா? இவ்வினாவிற்கு விடை இங்கு வேண்டுவதில்லை. ஆனால், சோழபாண்டியரின் சொல்லை மெய்யாக்குவதற்கென்று சிலம்பில் வேண்டாத பாடம் எப்படியோ

சேர்ந்து விட்டது காணக் குருதிக் கண்ணீர் வடிக்கின்றோம்! புறப்பாட்டில் "குரவர்த்தப்பிய கொடுமையோர்க்கும்" என்ற செஞ்சொற்றொடரை விடுத்துப் "பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்என்ற பசையற்ற பாடத்தைக் கொண்டதினும் பரிதாப மாக இது உள்ளது! பத்தினிக் கடவுளை நீர்ப்படை செய்தபின் செங்குட்டுவன் தன் உடனிருந்து உதவிய ஆரிய அரசர் நூற்றுவருக்கு விடை கூறி விடுக்கின்றான். பின்னர் நீலன் முதலிய கஞ்சுகமாக்கள் ஆயிரவரை அழைத்து ஆரியப் பேடி ஒருத்தியை அருந்தமிழ் ஆற்றல் அறியாது மலைந்த கனக விசயரோடு சேர்த்து, அமர்க்களத்து அடியெடுத்து வைக்காது அப்பால் விலகியிருந்த சோழ பாண்டியருக்குக் காட்டிவருக எனக் கட்டளை யிடுகின்றான். இங்குப் பேடியின் உடல் விளக்கம் முன்னும், கனக விசயரின் உள்ள விளக்கம் பின்னும் இவர்களை இணைத்து இட்டுச் செல்லும் கஞ்சுகமாக்களின் இயல்புகள் இடையிலும் பொருத்தமாக இடம் பெறச் செய்திருக்கின்றார் இளங்கோவடிகளார். (நீர்ப்படைக்காதை).

ஆரிய மன்னர் ஐயிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னாட்டுச் செல்க வென்றேவிக்
கருங்கயல் நெடுங்கண் கவின் பெறுகாதில்
விரிவெண் தோட்டு வெண்ணகைத் துவர்வாய்ச்
சூடக வரிவளை ஆடமைப் பணைத்தோள்
பாடகச் சீறடி ஆரியப் பேடியோடு
எஞ்சாமன்னர்க்கு இறைமொழி இறுக்கும்
கஞ்சுக முதல்வர் ஈரைஞ் ஞூற்றுவர்
அரியில் போந்தை அருந்தமிழ் ஆற்றல்
தெரியாது மலைந்த கனக விசயரை
இருபெரு வேந்தர்க்குக் காட்டிட ஏவி

என்பதே ஏற்க வேண்டிய தகுந்த பாடம்! இதனை விடுத்துத் துறவிக் கோலத்து ஓடிய மன்ன குமரரைத் தேடிச்சென்று செங்குட்டுவன் சிறைசெய்தான் என்ற வேண்டாத ஒரு கருத்தைப் பொருத்தமில்லாமல் நுழைக்க வேண்டிமுதல் அடிக்கும் இரண்டாம் அடிக்கும் இடையில்

"தாபத வேடத்து உயிருய்ந்து பிழைத்த
மாபெரும் தானை மன்ன குமரர்"

என்னும் ஈரடிகளை ஏனோ பெரும் பேராசிரியர் சாமிநாத ஐயரவர்கள் தம் பதிப்பில் சேர்த்து விட்டிருக்கின்றார்! மன்ன குமரர் யார்? கனக விசயரா? அவர் தாம் பேடிக்குப்பின்னால், தூதர்க்கு அப்பால் பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டிருக்கின்றனரே! மன்ன குமரர் என்போர் கனக விசயரோடு செங்குட்டுவன் தன் சினவலைப்பட்ட ஐம்பத்திருவரா? அவர் தாம் கடுந்தேராளராகக் காட்சி தருகின்றனரே? தாபதக் கோலம் அவர் கொண்டது எப்போது? எனவே இந்த ஈரடிச் சேர்க்கைக்கு நேரடியான விளக்கத்தை யாரும் பெறமுடியாது. சூடகவரிவளைக்கும், பாடகச் சீரடிக்கும் இடையில் "வளரிள வனமுலைத் தளரியல் மின்னிடையைக்" கொண்டு வந்தது பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவதில்லை!

கோலம் கொண்டாரில்லையா?

போர் என்று இருந்தால், நகைச்சுவையும் இருந்தால் தான் நன்றாக இருக்கும்! கங்கைக்கரைப் போரிலும் ஆரியருள் சிலர் உயிரைக் 'கருப்பட்டி'யாகக் கருதிச்

"சடையினர் உடையினர் சாம்பல் பூச்சினர்
பீடிகைப் பீலிப்பெரு நோன்பாளர்
பாடுபாணியர் பல்லியத் தோளினர்"

என்ற நிலையில் உருமாறிக் 'கொல்லாக் கோலம்' கொண்டு செங்குட்டுவன் அருள் நோக்கைப் பெற்று விரும்பிய வழிபடர்ந்து சென்றனர்! பத்துத் திசையிலும் பறந்தோடிச் சிதறும் அவர்களைச் செங்குட்டுவன் சேர்த்துத் திரட்டி 'வெல்போர்க் கொண்டான் என்பதற்கோ அவர்கள்மீது 'கொதியழற் சீற்றம்' கொண்டான் என்பதற்கோ சிலம்பில் வாய்ப்பும் இல்லை!

அஞ்சினர்க்கு அளிக்கும் அண்ணல்

வாலியின் வாய் மொழியால் கோசல நாடுடை வள்ளல் திருந்திவிட்டான் என்றும், தேரும் தானையும் இழந்து நின்ற இலங்கையர் கோனை "இன்று போய்ப் போர்க்கு நாளைவா!" என்று கூறிப் பெருமையுற்றான் என்பதிலும் பொருளுண்டு. ஆனால் கொள்ளாத கோலத்தைக் கனகவிசயர் கொண்டார் என்று பேசுவதிலும், செய்யாத தவற்றைச் செங்குட்டுவன் செய்தான் என்று பேசுவதிலும், மாடலன் மறைமொழி கேட்டுத் திருந்திய செங்குட்டுவன்

"ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கி ... ...
... ...
... ... மன்னவர்க்கு ஏற்பன செய்க நீயென"

வில்லவன் கோதையை விரும்பி ஏவி உயர்வடைந்தான் என்பதிலும் பொருள் சிறிதும் இல்லை! வஞ்சினம் வாய்த்த வேந்தன் இயல்பாகவே வெஞ்சினம் போக்கினன் என்பதை முன்னர்க் கண்டோம். பகைத்தோரை ஒறுத்துப் பணிந்தோர்க்கு அருளுதல் செங்குட்டுவனின் தலையாயதொரு பண்பு! இதனை அறிந்துள்ளதாலேயே ஆசானும் தொடக்கத்திலேயே செங்குட்டுவனை விளிக்கும் பொழுது.

"அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர் அண்ணல்!

என்று கூறுகின்றான். மாடல மறையோன் நீண்டதொரு முன்னுரைக்குப் பின்னர் வேள்வி ஒன்று செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றான். செங்குட்டுவன் தமிழ் நெறி நிற்பவன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்னும் பொய்யா மொழியை மனத்தில் இறுத்திய பொதியில் பண்பினன். இமயப் பண்பினரின் வழிநின்று

"நான் மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெரு நல் வேள்வி ... ..."

செய்துதான் வீட்டினை வளைக்க வேண்டும் என்று எண்ண வேண்டிய நிலையில் இல்லாதவன் இருந்தாலும் செங்குட்டுவன் ஓர் அரசன்! சைவம், பிரமம், வைணவம், வேதம், ஆசீவகம், நிகண்டம், சாங்கியம், வைசேடிகம். பூதம் ஆகிய எல்லாச் சமயத்தோர்க்கும் செவிசாய்த்து நடுநிலைமை வழுவாது இருக்க வேண்டியவன். எனவே. செங்குட்டுவன்

"மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக் கொள ஏவி"

அரசன் என்ற தன் கடமையை நிறைவேற்றினன். உண்மை அவ்வளவே. மற்றபடி, கண்ணகியைக் கடவுள் மங்கலம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இளங்கோவின் புலமைச் செல்வம்.

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

காப்பிய மக்களின் சீரும் சிறப்புகள் யாவும் கதையிலே விளங்குமாறு செய்த இளங்கோ, தம் புலமை உள்ளத்தால், அவர்கள் கதையின் ஒருமைப்பாட்டினிலே தோய்ந்து நிலவுமாறு சித்தரித்துக் காட்டும் காட்சி நலன். வியப்பினையும் திகைப்பினையும் ஊட்டும் தன்மையது. காப்பியத் தலைவன் 'கல்லாக் களிமகனும் சொல்லப்படுகிறான்: மாசற்ற கற்புக் கடம்பூண்ட காப்பியத் தலைவியும் அல்லலுற்றுக் கலங்கி இறுதியினை தேடிக் கொள்ளுகிறாள்: எழில் நலங்குன்றாத பூங்குழற் பாவையாய மாதவி, கோவலன் மாண்டதால், அணிகளைக் களைந்து துறவு கோலம் பூணுகிறாள்; தென்னன் தன் தவற்றினை யுணர்ந்து உயிர் விட, அவனது தேவியும் ஒருங்கே மடிந்து விடுகிறாள். இத்தகைய இடர்ப்பாடுகளுள்ள சூழ் நிலையில், கோவலன் தன் பிழையினை அறிந்து 'என் தீது' என உணர்ந்து வருந்துகிறான். அவனே, கண்ணகியோடு, மல்லன் மூதூர் மதுரை சென்றது தன் பிழையே காரணமென்று உளம் நொந்து ஏங்கி வருந்துகிறான். எவ்விதத்திலும் மாதவி 'தீது இலள்' என கோவலன் மனமாரப் பரிந்துரைக்கிறான். கண்ணகியோ, தன்னை 'தீத் தொழிலாட்டியேன்' எனப் பகர்ந்து, தென்னன் 'தீதிலன்' எனப் பறை சாற்றுகிறாள். பாண்டியனோ, குடிபழி தூற்றுக்கஞ்சி,

---

(15-ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதை யொட்டி நிகழ்ந்த "சிறையோர் கோட்டம் சீத்தது" முதலான அருட் செயல்கள் அனைத்தும் 'வடதிசை வணக்கிய மன்னவரேறான' செங்குட்டுவன் தன்னியல்பிற் கேற்பத் தானே விரும்பி மேற்கொண்ட செயல்களே யாகும்!

கனக விசயர் கொள்ளாத கோலத்தையும், செங்குட்டுவன் செய்யாத குற்றத்தையும் இனிமேலாவது நாம் பேசாமல் இருப்போம்!

தமிழ் மன்றங்களும், வட்டங்களும், கழகங்களும் இக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் என நம்புவோம்!

தன் தவறினை யுணர்ந்தும், பொற் கொல்லனை மறந்தும் 'யானே கள்வன்' என மயங்கிமடிகிறான். இதன் மூலம் ஆறிடும் மேடும் பள்ளமுமே போன்று குற்றமும் நற்றமுமுடையதே மனிதப் பண்பென்றும், பேருணர்ச்சிகளின் மயமாய்ப் பிறக்கும் நிகழ்ச்சிகள் உயர்ந்த பண்புகளின் பயனாக ஏற்படுவது உலகியற்கை யென்றும் செய்த தவறினை ஒருவர் தாமே ஏற்றுக் கொள்ளுவதும் அருமையுடைத் தென்பதையும் இளங்கோ விளங்க வைத்தார். காப்பிய மக்கள் யாவரும் பிறர்மேல் குற்றத்தை ஏற்றிச் சொல்லாது தாங்களே தவற்றினை செய்ததாக மனம் புழுங்கித் துணிந்து ஒப்புக்கொள்ளும்படியாகச் செய்த வகை இளங்கோவின் புலமைச்செம்மையினைத் திறம்படக் காட்டும் தகைமையுடைய தோடமையாது அறிவிற்கும் நல்விருந் தளிக்கும் பான்மையது.

ஊழ்வினையும் வாழ்வினையும் தன் புலமைத் திறத்தாலே இசைத்த இளங்கோ, இறை நிலையினைப்பற்றியும் உயிர் நிலையினைப்பற்றியும் உரைத்திருப்பது அவர் வாய்மையின் வழித்தாய் மன நலத்தை அளிக்க வல்லது. இளங்கோ, கடவுளுக்கு வேறோர் காட்டு வேண்டாது, தானே விளங்கி உலகை வாழ வைக்கும். ஞாயிறு, திங்கள், மழை முதலியவைகளையே

'திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண்குடை போன்றிவ்
வங்க ணுலகளித்தலான்.
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் றிகிரி போற் பொற் கோட்டு
மேருவலந் திரிதலான்.
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாம நீர்வேலி யுலகிற் கவனளிபோன்
மேனின்று தான் சுரத்தலான்.

என அழகுற இசைத்து, அவை உலகளாவி உய்ந்நெறி காட்டி மாசற்ற இன்பவாழ்வை நிலவச்செய்து உதவும் தகைமையால், கடவுளாகக் காண்கின்றார். இவைகளைப் பெரும்பாலும் அறிவு, அன்பு, ஆற்றல் என முறையாகக் கொண்டு இறைவனைப் பண்பாக வாழ்த்துதல் மூலம், வழிபாட்டிற்கும் மக்கள் மனத் திற்கும் உள்ள இயற்கை இயைபினைக் கட்டுரைப் பாராயினர் உள்ளூர வழிபாடியிற்றும் திறம், தெய்வ மென்பதோர் சித்த முண்டாகச் செய்து, விதிக்கு அஞ்சுவது நீங்கி, அதனைத்

தாங்கி நிற்கும் ஆற்றலை ஏற்படுத்துமென்பது, இளங்கோவின் கலை உள்ளம். அன்பறி வாற்றல்களுடைய கடவுள், ஒன்றாய், வேறாய். உடனாய் நிற்பதுபோன்று, ஒன்றாய் நிற்கும் அன்பையும், வேறாய் நிற்கும் அறிவையும், உடனாய் நிற்கும் ஆற்றலையும் ஒன்றுபடுத்தி, மக்கள் அயரா அன்பின் இறை கழலைச் சார்தலாய செல்வத்தைக் குறிப்பினாற் இளங்கோ கூறி, சமயச் சார்பில் தானும் சிக்காது, பிறரையும் சிக்க வைக்காது. கற்பார் மனத்தில் ஆராய்ச்சி யுணர்ச்சியைத் தோற்றுவிப்பது இவரது புலமைச் செல்வத்தினியல்பு. ஐயைக்கோட்டம், ஊர்க் கோட்டம். பகல் வாயிலுச்சிக்கிழான் கோட்டம், பலதேவன் கோயில் நெடியமால் கோயில், அறுமுகன் கோயில். அருகன் கோயில், சாத்தன் கோயில் முதலிய வழிபாட்டிடங்கள் தோறும் இன்பக் கூத்தாடும் அன்புக் காட்சியையே கடவுட் காட்சியெனக் கொண்டு, மெய்வகை யுணர்ந்த பொதுமைப் புலமையால், சமயக் காழ்ப்பில்லாது சமயப் பொறுமையோடு கூடிய வாழ்வே மனவமைதிக்கு இன்றியமையாது வேண்டப்படுதலை நிலை நாட்டுகிறார். மெய்யின்ப நுகர்வின் பொருட்டுச் செய்யும் கொண்டாட்டத்தைத் தெய்வ விழவு எனக்கொண்டு,அது பசியும் பிணியும் பகையும் நீக்கி,வசியும், வளனும் சுரக்கும் நோக்கத்தைத் தெளியவைத்தார். பண்பு, நேர்மை, சீலம், உண்மை, அறிவு ஆகியவற்றை மேற்கொண்டு வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி கூறும் சமயமே இளங்கோவின் சமயம். இளங்கோ. சமண சமயத்தைச் சார்ந்திருந்தும், பலதிறப்பட்ட சமய நெறிகள் உணர்த்தும் அடிப்படைக்கருத்துக்கள் ஒன்றெனக்கொண்டு தன் உணர்ச்சிக்கு உருக்கொடுக்காமல் பல சமய நிலைகளை, தனித் தகைமையில்லாது சிறப்பாகக் கிளக்கும் தன் மயத்துவமாகும் இயல்பு, இவரது புலமைக்கு அணிசெய்து, சமய எல்லைக்கும் அப்பால் இவரது மாசற்ற சமய சமரசப் புகழைப்பரப்பியது.

ஆசிரியர் இளங்கோவின் பரந்த புலமைச் செல்வத்தினைக் கவினுற எடுத்துக் காட்டுவது அவர் கையாளும் உவமையாகும். இளங்கோவின் அறிவு உலக இயற்கை யழகிற் படிந்து தனி மனத்திற் சுரந்து பொங்கிய அரிய பெரிய கருத்துக்களை அழகாகக் கோத்து புணர்த்திச் சொல்ல, உவமை அவருக்குச் சிறந்த கருவியாக பயன்பட்டது. அவரது உவமைகள் உலகியல் ஒழுக்கத்தின் உண்மை நிலையை உருவாக்கி, உணர்வைக் கிளப்பி, பல பொருட்டோற்றங்களையும் வாழ்வின் குறிக்கோள்களையும் எளிதில் காட்டி, அவரது உள்ளத்தின் உயர்வையும், அரியன பகரும் பண்பட்ட சிந்தனையின் வளர்ச்சியையும், இலக்கியப் புலமைச் சுவையினையும் ஒருங்கே விளக்கும் எழிலுடையன.

அவை, ஐம்புலன் கட்கும், அறிவுக்கும் இன்பம் தருதலான், நுட்பம் அறிந்து ஆழ்ந்து சிந்தித்து மகிழத்தக்கவை. உண்மை நவிற்சியினை பொருட்படுத்தும் இளங்கோவின் புலமைவாக்கில் விளங்கும் உவமைகள், அழகாகவும் அமைவுடைத்ததாகவும் இருத்தலோடு, காப்பியத்தின் கோட்பாடுகளுடன் பொருந்துமாறு திருத்தமாய நயங்கள் வாய்க்கும் வண்ணம், செஞ்சொற்களிலே சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஓசை தரும் இன்பத்தோடு ஆக்கப் பட்டிருப்பது வியத்தற்குரியது.

கோவலன் புகார் நகரை நீங்கி அகன்ற ஞான்று, ஊரின் நிலைமையை கோசிகன் கூற்றுக,

‘அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேதுற்றது’

என்றதில், இராமன் அயோத்தியை விட்டுச் சென்ற பின், துயரில் மூழ்கிய அயோத்தி மக்களும் ‘அந்தோ பிரிதுமோ ஆவிதியேயோ’ என விதியை நொந்ததை எடுத்துக் கூறும் பொருளுக்கு கருத்து விளக்க முண்டாக, ஊழின் காப்பியக் கருத்தை உவமை மூலம் குறிப்பாக உள்ளத்தில் நிலைபெறச் செய்தார், காப்பியப் போக்கினைத் தடைசெய்யா வண்ணம் காப்பிய அழகில் நன்மை அமையுமாறு,

‘துஞ்சா முழவின் அருவி ஒலிக்கும்’

* * *

‘மறவோ ராக்கிய ஆவுதி நறும்புகை
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்’

என்பன போன்ற இளங்கோவின் சின் மென் மொழி யாலாய உவமைகள் அறிவைக் கொளுத்தி உன்னத மின்னல் நடைபுரிந் தேகும் எழிலுடையன. இத்தகைய உவமைகள், இயற்கையின் பெருமையினையும், வல்லமையினையும் தெளிவுபடுத்துவதல்லாது இவரது புலமையின் விரிவை உறுதிப்படுத்தி நிலைநாட்டுகின்றன. கட்டுக்கடங்கா இளமையின் மிடுக்குத்தனத்தை களிறுக்கி அதன் மதம் வெளிப்பட்டு வரம்பு கடந்து செல்லுதற்குரிய காரணம் மடந்தையரது எழிற் பார்வையென

‘நன்னுதல் மடந்தையர்
மடங் கெழுநோக்கின் மதமுகம் திறப்புண்டு
இடங்கழி நெஞ்சத்து இளமையானை
கல்விப் பாகன் கையகப் படாஅது’

என பல்லாற்ருனும் நயமும், சுவையும், வியப்பும் மனதில் ஊன்றுமாறு தெளிவு பெறச் செய்தலின், இவ்வுவமை வாழ்க்கையை யொட்டிய அனுபவமாக, களிகொள் காமக்கிளர்ச்சி யையும். காமக்களேயின் வரம்புகடந்த இன்பச் செலவினேயும் வழங்கும் பெற்றியது. எனினும் இவ்வுவமையின்கண், அடக்கி யாளுதற்குரியதாய இளமைப் பருவம், பொறிபடக்கம் கைவரப் பெறல் வேண்டு மென்றும், அதனைத் தவருய நெறியிற் செலுத்துதல் கூடா தென்றும், இளங்கோ குறிப்பிடுதல் உணரற்பாற்று.

உயிர்ப்பியல்பு நிறைந்த இயற்கைக் காட்சியின் இனிமைச் செல்வத்தை, இளங்கோ தன் புலமைத்திறத்தால் வளமிக்கதோர் தேன்கவிதையாகக் காப்பியத்தில் உண்மைநலனும் மாட்சியும் புலப்பட திகழ வைத்திருந்தும், துயர்தரும் மாலையின் வருகையை இலக்கியத்தகுதியோடு இயம்பியவகைஅறிதற்பாலது. உலகம் உவக்க வரும் ஞாயிற்றைக் காணுது புவிமடந்தை கலங்குங் காலே, நெடுமுடி வேந்தர் இல்லாத அற்றம் பார்த்து, குடிமக்கள் வருந்துமாறு, கள்ளத்தனமாகப் புகும் குறுநில மன்னரைப் போன்று மாலேப் பொழுது வந்துற்றதை

'திரை நீராடை யிருநில மடந்தை
அரைசு கெடுத்தலம்வரும் அல்லற் காலேக்
கறை கெழுகுடிகள் கைதலே வைப்ப
அறைபோடு குடிகளோ டொருதிறம் பற்றி
வலம்படுதானே மன்னரில் வழிப்
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்
தாழ்துணை துறந்தோர் தனித்துயரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்த

மல்லல்மூதூர் மாலே வந்திறுத்தென' எனமிக்க பொருண்மை தோன்ற ஓதி, எவ்வாறு போதாகி நின்ற பூக்கள் இதழ் விரிக்கும் மாலேப் பொழுது, கோவலனைக் கூடிய மாதவிக்கும், அவனேப் பிரிந்த கண்ணகிக்கும், முறையே இன்ப துன்பத்தை விளேவித் தென்பதை, அழகுற இளங்கோ

'கூடினுர் பானிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடை போற்காட்டிற்றே—கூடிய
மாதவிக்குங் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து

போதவிழ்க்குங் கங்குற்பொழுது' என
இசைத்தது பாராட்டற் பாலது.

மற்றும் கண்ணகி அவிழ்ந்து விரிந்த கூந்தலோடு துன்பக் கோலமாக நிலமிசை முகம் சேர்த்து அழும் தோற்றம் சந்திரன் (முகம்) மேகத்தோடு (கூந்தல்) வந்து அவனியில் விழுந்து கிடப்பது போலிருப்பதை

'பொங்கி எழுந்தாள், விழுந்தாள், மொழிகதிர்த்
திங்கள் முகிலொடும் சேண் நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள்'

எனக்கூறி நமதுள்ளத்தையும் அவலத்தில் இளங்கோ ஆழ்த்துகிறார். அமைச்சரோடு முறைசெய்யாத கொடுங்கோல் மன்னனது ஆட்சிக்குட்பட்ட நிலம் துயர்காட்டிப் பாழ்படுவது போன்று, முல்லையும் குறிஞ்சியும் தம் தம் முறைதிரிந்து நல்லியல்பிழந்ததால், துயர்காட்டி பாலையாக மாறுமென்றதிணை மயக்கத்தின் நுண்மையை

கோத் தொழிலாளரொடு கொற்றவன்கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல
வேனலங் கிழவனெடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'

என இளங்கோ உவமை வழிக் கவினுற நவின்று, யாது காரணம்பற்றி பாலைக்குத் தனிநிலம் தொல்காப்பியர் வேண்டிற்றிலரென்ற காரணத்தையும் நுண்ணிதின் புலப் படுத்திய நயம் விம்மிதத்தினையும் வியப்பினையும்பயவா நிற்கும்.

இளங்கோ, செவிக்கு இனிமை பயக்கும் தமிழ்ச் சொற்களைச் செல்வமாகக் கொண்டுள்ளதினுன், இவரது புலமை, சொல்லாகிய செல்வத்தை மருவியது, பொருளை நினைந்துணரும்படி

அறிவிக்கும் ஆற்றலுடைய சொல்லாக்கம் தமிழ் மொழியில் உள்ளதை உணர்ந்த இளங்கோ, தனிச்சொற்களைத் தம் நுண்ணிய அறிவினாலே இலக்கண அமைதியோடு கூட்டவும் குறைக்கவும் வகை செய்து, சேர்க்கைச் சொற்களாகிய பகுபதங்களைப் பெருக்கவல்ல மொழிப் பண்பை, மாசுரு நிலையிலமைத்து, உணர்ச்சியின் நுண்மையால் புதிய சொற்கள் மரபுகெடாது படைத்துக் கொள்ளும் வாய்ப்பினையும் சிறப்பித்தார் எடுத்துக்காட்டாக

'கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறை செய்வேலி அகவயினாங்கோர்
புன்னைநீழற் புதுமணற் பரப்பில்'

என்றதில், கடலினது புலால் நாற்றத்தைக் கெடுத்த மடற்றாழையால் காவல் வேலியாகக் கொண்ட மணற்பரப்புடைய இடத்தில் மகிழ்ச்சிதரும் புன்னைமர நிழலின் இயலழகை இளங்கோ தெரிவித்து நம்மை, தம் கவிதை அலைகள்மீது எடுத்துச்சென்று, வளமுறும் சுவைக்னிந்த சொற்களை — 'சிறை செய்வேலி' அகவயின்' — அமைத்துச் சேர்த்துப், புறப்பொருள் வழி அமுதூறும்படித் தெளிவுடன் தாம் ஆளுந்திறனை நமக்குப் புலப்படுத்திச், சொற்களின் உண்மை நல மாட்சியினை விளைவிப்பா ராயினர். அரசாளப் பிறந்த இளங்கோ தவவுருத் தாங்கிய திருவினராய், சொற்களைச் சுவை வீரியங்களோடு ஆற்றலுற விளங்கும்படி ஆளும் கருத்து வகையினை நல்லிசை யுரை யாசிரியராய அடியார்க்கு நல்லார் உளவு கூறுவது ஈண்டுநினைவு கூர்ந்து மெய்ம்மை தெளிதற்பாலது. 'சிறை யகத்திருந்த காவுந்தி ஐயை' என்றதில், அடியார்க்கு நல்லார், ஆசிரியர் கருத்தறிந்து 'தவவேலிக் கண் இருந்த கவுந்தி அடிகள்' என உரைமலர்த்தினர். இதன் மூலம் சிறை' எனும்மொழித் 'தவம்' எனும் சிறப்புப் பொருளைத் தாங்கியதென்பதும், 'சிறைப் பென்னும் மொழி தெய்வத் தன்மையினைச் சுட்டும் சிறப்பென மொழியப்பட்டு வழங்குவதாயிற்றென்பதையும் நன்குணர்த்துவ தாகும். இத்தகைய ஆற்றலும் வளனும் மிக்குடைய சொற்கள் போன்றவைகள் இளங்கோவின் உணர் வெழிலில் சுரந்து, நுட்ப திட்பஞ் செறிய விளங்கி அவர்தம் காப்பியத் தெழிலை எழச் செய்தன வென்பது சிறிதாழ்ந்தறிந்துப் பயில்வார்க்கும் அங்கை நெல்லியே யாமென்க.

இங்ஙனம் நுணுகி ஆய்ந்து மொழியிலுள்ள ஒலி நுட்பம் பொதுளிய மெல்லெழுத்துக்களையும் இடையெழுத்துக்களையும்

கொண்டு ஓசை யின்பம் பயக்கும் செஞ்சொற்களையும், சொற்றொடர்களையும், எடுத்து, இளங்கோ தன் காப்பியம் ஓசை நயமும். மூவாத இனிமையும் திகழத் தமிழ் மொழியின் தொன்மை சான்றதோர் தனிநிலையைச் சிறக்கும்படித் தழைக்கச் செய்தார். பயின்றுவந்த வடசொற்கள் இக்காப்பியத்தின்கண் அற்பமாய்க் காணப்பெறினும், ஒல்லும்வகை பிறமொழிக் கலப்பினை ஒழித்துப் பழைய தமிழ் மொழி வழக்கினைப் போற்றி, பிற மொழிச் சொற்கள் ஒரோவழி தமிழ் மொழியில் வருங்கால், அச் சொற்களின் உண்மைப் பொருளை நுனித்தாய்ந்தறிந்து அவைக் கேற்ப, தூய்மையாய தமிழ்ச் சொற்களை மொழிபெயர்த்தமைத்து தமிழ் மொழிக்கு ஆக்கம் தரும் அளவில் வழங்குவாராயினர். 'சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன் தக்ஷிணாமூர்த்தி' எனச் செல்ல வேண்டிய இளங்கோ, வடசொல்பெயரை 'ஆலமர் செல்வன்' என தமிழ்ப்படுத்தித் தெளிவும் இனிமையும் பயப்ப, நயநாகரிகமாகக் கூறிப்போந்தார். மற்றும் 'சாம்பூநதம்' என்ற பொன்னின் பெயரைக் குறிக்கும் வேற்றுச் சொல்லைப் பெய்தலைக் கடியக் கருதி அச்சொற் பொருளை விரிப்பிப் பான்வேண்டி 'நாவலம் பொன்னிழைசேர்' எனப் புகல்வா ராயினர். இன்னணம் பலவட சொற்களை ஒரீஇத் தமிழ்ப் பெயர்களை இளங்கோ கிளந்துரைத்தது பலவாகும், செஞ்சொற் கவிஞராகிய இளங்கோ, பொதுவாக பகுபதங்களின் உதவி கொண்டே வாழ்வின் வனப்பையும் வளத்தையும் அனுபவத்தையும் தக்க சொற்களில் வடித்து, தமிழின் சொற் செல்வம் சிறந்தோங்க, சொல்லின் ஆற்றலை தமிழுக்கு இயல்பா யுள்ள பெருமித நடையில் புலமைவளம் பழுனி அமைய தெளிய வைத்தார். சிறப்பாகச் செய்யுட்பொருளும் உணர்ச்சி யாற்றலுக்கு மேற்ப, தமிழும் தமிழ் நடையும் அமைத்துக் காப்பியப் பொருளை ஆற்றல், வீறு, வளம், தெளிவு முதலிய நலன்களையுடைய சொற்களின் வழி விளங்கவைப்பது ஆசிரியர் இளங்கோவின் தனிப்புலமை மாண்பு.

காதற்றலைவன் பிரியின் தனக்கு மரணமெனக் கருதி வருந்தும் மாதவியின் இல்லற வொழுக்க இயல்பையும், அகத்துறவற விழுப்ப நிலையையும் நம்முள்ளத்தே பகுத் துணர்ந்து காணுமாறு, இளங்கோ சுவைகனிந்த சொல்லோவிய மாகத் தீட்டிப்படைத்த இருமடல்களும், சொல்வன்மை யாலாய காப்பிய வீறுக்கு அணிகோலுவதாய்த் திகழ்கின்றன. இம் மடல்களில் எடுத்தாண்ட சொற்கள், வலியும், அளியும் தெறலுங் கொண்டு உண்மை யுணர்ச்சிகள் ஒளிறிக் கதிர்காலும் வகையில் அமைந்துள்ளன. முடங்கலை வெறும் ஓலையாகக் கருதாது

அதனில் எழுதுவோர் திருமுக வுணர்ச்சியைக் காணுமாறு இளங்கோ செய்து முடங்கலைத் திருமுகமென வழங்கவைத்த திறம் இறும்பூது பயப்பதாகும். முதற்கண் மாதவி எழுதிய காதற்பனுவலில், ஒரு தலைக்காமத்தாலெழுந்த சொற்களின் வழி மாதவியின் திருமுக வுணர்வை கோவலன் காணுமாறு அமைத்து, பின் இரண்டாம் மடலில் கோவலன், ஆனுப் பெருவியப்போடும் மதிப்போடும் மாதவியின் திருமுக வுணர்வையும், தன்முக வுணர்வையும் ஒருங்கே காணுமாறு, இளங்கோ அமையத் தெருட்டி, மற்றும்தன்சொல்லமைதியால் இம் மடங்கலின்பொருள் ஒப்புமையாகக் கோவலனது பெற்றேர்க்கும் இணைந்தமைந்து பொதுமையில் பொருந்துமாறு வகைசெய்து, கோவலனது உளப் பாங்கினையும் நமக்குத் திறம்பட தெளிய வைத்தமையைச் சற்று உற்று சிந்தித்துக். காப்பியச் சுடர் வீசும் சொல்லின் பண்பும் பயனும் இத்தகையது கொல்' என நினைந்து அதன் மாட்சிமையும் தெளிதல் வேண்டும்.

பொழிலன்பர்கள் சுவைக்க.

தமிழ் மக்கள் உயர்வு

மக்களுள் ஒருபகுதியாருடைய உயர்வை அளந்தறிவதற்குள்ள வழிகள் பலவற்றுள்ளும் சிறந்தது அப்பகுதியார் பேசும் மொழி யாராய்ச்சியே யாமென்பது அறிஞரனைவரும் கண்டறிந்ததோருண்மை ஒரு பகுதியாரதுமொழிஇலக்கணச் செம்மையும் இலக்கியப் பெருமையுமுடையதாகக் காணப் படின், அம்மொழியாளரும் செம்மையும் பெருமையுமுடைய வராகக் கருதப்படுவர். அவர்மொழி அங்ஙனங் காணப்படா தொழியின், அவர் நொய்மையும் சிறுமையுமுடையவராகக் கருதப்படுவர். ஆகவே தமிழ் மக்கள் உயர்வு தெரிய வேண்டுவார்க்குத் தமிழ்மொழியின் இலக்கணச் செம்மையும் துணியப்படல்வேண்டும். அவ்வாறு துணியப்பட்ட மொழி தமிழேயாயின், தமிழ் மக்கள் உயர்வுடையாரென்பது தானே பெறப்படும்.

— தி. க. உலகநாத பிள்ளை

பொ. து. 1 (1925) பக்-16

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

இருங்கோவேளும் நற்குடி வேளாளரும்

(இரு தமிழ்க் குலத்தோரின் தொன்மை, தோற்றம் பற்றிய சில கருத்துக்கள்)

திரு. பி. இராமநாதன், பி. ஏ., பி. எல்.,

[இலண்டன் பல்கலைக் கழகத்தின் " ஆசிய, ஆப்பிரிக்கப் படிப்புக்கள் பள்ளியின் தாளிகை" தொகுதி 32 பகுதி-2இல் (1969 சூன் திங்கள்) பக்கங்கள் 323 — 343-இல் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்]

கங்கைச் சமவெளிக்குப் பதினெண்குடி வேளிரையும், அருவா நாட்டாரையும் இருங்கோவேளின் தலைமையின் கீழ் நற்குடியார் 24 குடும்பத்தினரையும் அனுப்பிவைத்தனர். மற்றவர் களெல்லாம் சிறிது காலத்தில் தென்னாடு திரும்பிவிட்டன ரெனினும் இருங்கோவேளும் அவன் இனத்தாரும் வடநாட் டிலேயே தங்கி, முதலில் கங்கைக் கரையிலும், பின்னர் காசுமீரத்தில் சிந்து நதிக்கரையிலும் குடியேறி வாழ்ந்தனர். மகாபாரதப் போருக்குப் பின்னர் கிருட்டிணன் அழைப்பின் பேரில் குசராத்திலுள்ள துவாரகைக்குச் சென்று குடியேறி அங்கு சுமார் 1170 ஆண்டுகள் வாழ்ந்தனர் "

14. " சுமார் கி. மு. 1930-இல்[18] தமிழக அரசர் மூவர் வேண்டுகோளின் பேரில் நற்குடியார் தமிழ் நாட்டிற்குத் திரும்பி வந்து கொற்கையில் குடியேறினர். அப்பொழுது அவர்கள் எண்ணிக்கை 1000. அவர்கள் தொகை 3000 ஆகப் பெருகிய போது கொற்கையிலிருந்து 1000 பேர் கொண்கானத்தில் உள்ள வேணாட்டிற்கும், மற்றொரு 1000 பேர் சோழ நாட்டில் உள்ள

---

18. ஒரு தலைமுறைக்கு 21 ஆண்டுகள் வீதம் 49 தலை முறை களுக்கு 1000 ஆண்டுகள் கணக்கிட்டு, சுமார் கி. பி. 100-இல் இருந்த கபிலருக்கு ஆயிரம் ஆண்டுக்கு முன் (அதாவது கி மு. 10-ஆம் நூற்றாண்டில்) வேளிர் தமிழகத்தில் நுழைந்திருக்க வேண்டும் என்கிறார் இராகவஐயங்கார்.

இருங்கோவள நாட்டிற்கும்[19] சென்றனர் பாண்டிய, சோழ, சேர அரச குடும்பத்தினரை வீழ்த்தித் தங்கள் கைக்கூலிகளை மூன்று தமிழ் மன்னர்கள் இடத்திலும் ஆரியர் நிறுவியபோது நற்குடியாரும் கொற்கையிலிருந்த அவர்கள் குரு அக்கினீசுவரரும் மும்மன்னர்கள் குடும்பங்களும் அழியா வண்ணம் குடும்பத்திற்கொரு வாரிசைத் தங்கள் பாதுகாப்பில் காத்துவளர்த்து வந்தனர். பின்னர் அவ்வாறு வளர்க்கப்பட்ட மூன்று சிறுவர்களும்[20] பெரியவர்களானபின் ஆரியரை முறியடித்து மும் மன்னர்கள் பழங்குடிகளை அவரவர் இடங்களில் மீட்டும் நிறுவினர். அதற்குப் பின்னர் தமிழ் மன்னர் மூவருக்கும் முடி சூடும்[21] உரிமையை நற்குடியார் பெற்றனர். அதனோடு பாண்டிய மன்னனிடமிருந்து பரிசாகத் தற்கால முடிவைத் தானேந்தல் இருக்கும் இடத்தையும் பெற்றனர். ஆரியரின் கைப்பொம்மைகளான அரசர்கள் ஆண்ட சிறு இடைக்காலம் தவிரப் பிறகாலங்களிலெல்லாம் பாண்டிய மன்னனுக்கு நற்குடியாரே அமைச்சர்களாகவும் பொருளாளர் களாகவும் விளங்கினர்''

---

19. விருதராச பயங்கரன் என்று அழைக்கப்பட்ட முதலாம் குலோத்துங்கன் பேரைப்பெற்ற விருதராச பயங்கர வளநாட்டின் ஒரு பகுதி மேற்கா நாடு இருங்கோளப்பாடி நாடு: அதில் தற்காலத் தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களின் பகுதிகள் அடங்கியிருந்தன, முதற் குலோத்துங்கன் காலத்திற்கு முன் அதற்கு இராசராசவள நாடுஎன்றும் வடகரை இராசேந்திரசோழ வளநாடு என்றும் பெயர் வழங்கியது. (தென் இந்தியக் கல் வெட்டுகள்: 12-ஆம் தொகுதி(பல்லவர்கள்) சென்னை. 1943, 179) ந. வே. வ. (அ)இல் குறிப்பிட்டுள்ள இருங்கோவள நாடுஇந்நிலப் பகுதியைக் குறிப்பதாகலாம். பிற்காலத்தில் இருங்கோளப்பாடி நாட்டரசன் இருங்கோளக்கோன் எனப்பட்டான். 1915 - 16ஆம் ஆண்டின் கல்வெட்டாராய்ச்சி அறிக்கை: 75-ஆம் பத்தி)

20. கொற்கையில் கன்னிமார் சுனையில் குளிக்க வந்து கொண்டிருந்த தெய்வ கன்னியர் மூவரிடத்தும் அக்கினி மகரிசிக்குப் பிறந்தவர்களே அச்சிறுவர்கள் மூவரும் என்றகதை தர்சுடன் நூலில் வரும் நற்குடிவேளாளரைப் பற்றிய செய்தியில் காணப்படுகிறது. அக்கதையை ந. வே. வ. (அ), (ஆ) ஆகியவை மறுக்கின்றன.

21. பாண்டிய மன்னர்களின் தலையில் முடிவைக்கும் உரிமை தங்களுக்கு இருந்ததாகக் கொண்டைக்கட்டி வேளாளரும் கூறுவர். (தர்சுடன் – ''தென்னிந்தியச் சாதிகளும் குலங்களும்'')

15. இவ்விடத்தில் பட்டினப்பாலையின் 282-ஆம் வரியாகிய 'இருங்கோவேள் மருங்குசாய' என்பதற்கு[22] ந. வே. வ. (அ) ஒரு விநோதமான புதுப்பொருள் கூறுகிறது. அவ்வரி "இருங்கோ வேள் மருங்குசாய்" (கரிகாலன் இருங்கோவேளிடம் கேட்டுக்காடு கெடுத்து நாடாக்கினான் என்னும் பொருளில்) தான் இருக்க வேண்டும் என்கிறது அந்நூல்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் 30 இன் உரையில் கரிகாலன் அழுந்தூர்வேள் மகளின் மைந்தன் என்றும் அவன் நாங்கூர்வேளின் மகளை மணந்தவன் என்றும் நச்சினார்க் கினியர் கூறுகிறார். அப்படிப்பட்ட கரிகாலன் (பட்டினப்பாலைவரி 282-இன் உரையில் நச்சினார்க்கினியர் கூறுவது போல) "ஐம்பெரு வேளிர் குலமுழுதுங் குறைய" அவ்வேளிரை வேரறுத்திருப்பான் என்பது வியப்பிற் குரியது என்று ந. வே, வ, (அ)இன் பாராட்டு முன்னுரைகளில் ஒன்று குறிப்பிடுகிறது. கி. பி. 1751 முதல் 1795 வரை வாழ்ந்த செவலை அருணசல இருங்கோவின்[23] மேல் சுமார் கி. பி, 1760-இல் சேர்ந்தையாப் புல்வரால் பாடப்பட்ட பிள்ளைத் தமிழில் ஒரு இருங்கோவேள் கரிகாலனை முடிசூட்டுவதில் பங்கேற்றான் என்றும் அம் முடிசூட்டுச் சடங்குகளில் பயன் படுத்தத் தன்னுடன் கொஞ்சம் மண் எடுத்துச் சென்றான் என்றும் கூறப்படுகிறது. எனினும் மதுரைக் காஞ்சிவரி (55) ("இருபெரு வேந்தரொடு வேளிர் சாய") போன்ற பல இடங் களில் பல வேளிரைக்குறித்து "சாய" என்ற சொல் பழகி வந்திருப்பதால் ந. வே. வ. கூறும் பாடபேதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாய்த் தோன்றவில்லை.

16. "சுமார் கி. மு. 882-இல் நற்குடியார் சுமார் 3000 பேர் இருந்தனர் அப்பொழுது கொற்கையை ஆண்டுவந்த கூழைப் பாண்டியன் என்பவன் கொடுங் கோன்மையால் அவர்கள் கொற்கையை விட்டுச் செழுவை (செழுகை)க்குச் சென்று அங்குக் கோட்டைக் கட்டிக் குடியேறி வாழ்ந்தனர். (இராமநாதபுரம்

---

22. "எளித்த லேத்தல், வேட்கை யுரைத்தல் கூறுதல் சாதல் ஏதீடு தலைப்பாடு" (தொல் — பொருள் — பொருளியல் — சூத்திரம் 13; வரிகள் 1 —2). ந. வே. வ. கூறும் பாடபேதம் இவ்வரியின் வஞ்சிப்பா இலக்கணத்திற்குப் பொருந்தாது.

23. கீழ்வரும் 22-ஆம் பத்தியைப் பார்க்கவும்.

மாவட்டத்தில் முதுகுளத்தூருக்குத் தென்கிழக்கே பத்துமைல் தொலேவில் மேலச் செழுவனூர் என்னும் ஊர் தற்பொழுது உள்ள இடத்தில் செழுகை இருந்தது) செழுவையில் நற்குடியார் குடியேறுவதற்கு முன்பிருந்தே அங்கு புலீசுவரர்[24] கோயில் இருந்தது. முற்காலத்தில் கொற்கையிலிருந்து இருங்கோ வளநாட்டுக்கும் வேணாட்டுக்கும் குடிபெயர்ந்து சென்றிருந் தோரில் சிலர், தம் சாதியினர் குடியேறிய செழுவைக்கு மீண்டு வந்தனர்; நற்குடியார் தொகை 8000 ஆகக் கூடியது. பாண்டிய மன்னரால் கொடுக்கப்பட்ட கீழ்க்கண்ட $22\frac{1}{2}$ ஊர்களும் நற்குடியார் உடைமையாய் இருந்தன. (அவ்வூர்களின் நிலப் படம் கட்டுரை முடிவில் உள்ளது):—

1. மாறந்தை (தென்பாதி)
2. உரவயல்
3. கற்பிறக்கி
4. சித்துடையான்
3. கோட்டை யேந்தல்
6. குறிச்சிகுளம்
7. மடத்துக்குளம்
8. ஓட்டுடன்குளம்
9. ஏழு வெள்ளங்குளம்
10 கடுகு சந்தை
11. மீனன்குடி
12 சேரன் குடி
13. கடைகாற்குளம்
14. வேடந்தை
15. ஆலங்குளம்
16. சாத்தன்குடி
17. வேளிர்குடி
18 கண்டன் காணி
19. பள்ளியேந்தல
20. நாட்டியம்
21. பொன்னேந்தல்
22. காக்கைக் குட்டம்
23. பண்ணைக் குளம்

---

24. மேலச் செழுவனூர் திருபுலீசுவரர் கோயிலில் காணப்பட்ட கல்வெட்டுக்கள் நான்கில் மூன்று முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1215 — 35) காலத்தவை; ஒன்று "எம்மண்டலமும் கொண்டருளிய" மாறவர்மன் குலசேகரதேவன் காலத்தது. அவை 1927 — 28-ஆம் ஆண்டிற்குரிய தென்னிந்தியக் கல்வெட் டாராய்ச்சி ஆண்டறிக்கையில் 317 — 20 எண்ணுள்ள கல் வெட்டுக்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுக்களில் இவ்வூர் மதுரோதய வளநாட்டில் ஒரு பகுதியான இடைக்குள நாட்டில் செழுவனூர் என்ற சத்துரு பயங்கரநல்லூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, கவனிப்பாரற்றுக் கிடந்த அக்கோயில் ஒரு பெரிய குளத்தின் கரையில் இருந்தது என்றும் அக்குளநீர் அக்கோயிலேத் தரைமட்டமாக்க நெடுநாளாகாது என்றும் அவ் வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுமார் கி. பி. 298-இல் நற்குடியார் தங்கள் குலப்பெண் ஒருத்தியைப் பாண்டிய மன்னன் விக்கிரமவாகுவின் காதற்கிழத்தி மகனான கூத்தனுக்கு மணமுடிக்க மறுத்தமையாலும். அக் கூத்தனுக்கு முடிசூட்டிப் பட்டத்திளவரசனுக்க மறுத்தமையாலும் பாண்டிய மன்னன் அவர்கள் மேல் பகை பாராட்டலானான், நற்குடியார் மேல் ஒரு பொய் வழக்குத் தொடரப்பட்டது. தாங்கள் குற்றம் அற்றவர்கள் என்பதை மெய்ப்பிக்கத் தீ எழுப்பி அதில் மூழ்கி நற்குடியார் 700 பேர் மாண்டனர். அப்பொழுது அதிசயமாகத் தோன்றிய ஒரு பாம்பு மேலும் நற்குடியார் தீக் குளிக்காதவாறு தடுத்தது.[25] எனினும் அவர்கள் செழுகையை விட்டு நீங்கிவிட முடிவு செய்து தாங்கள் முன்னர் வாழ்ந்துவந்த தாமிரபரணி ஆற்றுப்படுகைக்குச் செல்லலாயினர். அவ்வாறு செல்கையில் குண்டாற்றைக் கடக்கையில் அவர்களிடையே இரு கட்சிகளுண்டாயின. செழுவையை விட்டுப் புறப்பட்ட 7300 பேரில் 3300 பேர் ஒரு கட்சியினராகி வடதிசை நோக்கிச் சென்றனர். அவர்களில் 300 பேர் திருப்பத்தூரில் தங்கி விட்டனர். 3000 பேர் கோதாவரிப் படுகைக்குச் சென்று குடியேறினர். கோதாவரிப் படுகைக்குச் சென்றவர்கள் தக்காண வரலாற்றில் சிறப்பிடம் பெறும் சாளுக்கிய[26] அரச பரம்பரையினர் ஆயினர். செழுகையர் என்பதன் திரிபே சாளுக்கியர் அல்லது சளுக்கர் என்பது. கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் சாளுக்கியர்

---

25. கோட்டை வேளாளர் பெண்கள் நடுத்தரவயது ஆனதும் அதுவரை அணிந்துவந்த சாதாரண அணிகளை நீக்கிவிட்டு ஐந்துதலைப் பாம்பின் உருவம் அமைந்த நாகபடம் என்ற தங்கத்தகட்டை அணிவது இக்கதையை நினைவூட்டுவதற்காகவே என்ற செய்தியைக் கோட்டை வேளாளரைப் பற்றிக் கூறுகையில் தர்சுடன் குறிப்பிட்டுள்ளார்.

26. சாளுக்கியரும் வேளிரே என்பது இராகவஐயங்கார் முடிவு. வடக்கே சென்ற நற்குடியார்கோதாவரி யருகே குடியேறிப் பெரிய அரசர்கள் ஆனார்கள் என்று மட்டுமே செழுகையம்மானை கூறுகிறது, ஆனல் அக்கூற்றுக்குமேல் ஒருபடி சென்று வடக்கே சென்ற நற்குடியார் தாம் சாளுக்கியர் ஆயினர் என ந. வே. வ. (அ) இல் ஆறுமுக நயினார் பிள்ளை கூறுவதற்கு அவர் இச்செய்தியில் இராகவ ஐயங்காரைப் பின்பற்றியதோ அல்லது "செழுகை"க்கும் "சாளுக்கியரு"க்கும் உள்ள பெயர் ஒப்புமையோ காரணமாகலாம். செழுவைக்கருகே வாகைக்குளத்தில் கி. பி. 1020-இல் வாழ்ந்த இராமசாமி பிள்ளை என்பவர் செழுகை

ஆட்சி வீழ்ச்சி அடைந்த பிறகு அவர்கள் பிரிவு பிரிவாகத் தமிழ் நாட்டுக்கே திரும்பி வந்து தமிழருடன் ஒன்றிக் கலந்து விட்டனர்''

18. ''மற்ற 4000 பேரும் தெற்கு நோக்கிச் சென்று[27] அல்லிக் குளத்தில் கோட்டைக் கட்டி அங்கு கொல்லம் 97 (சுமார் கி. பி. 922) வரை வாழ்ந்து வந்தனர். அவ்வாறு வாழ்கையில்

யம்மானையை எழுதியதாகக் கூறப்படுகிறது அது மதுரை ஸ்ரீ இராமச்சந்திர விலாசம் அச்சகத்தில் 1920-ஆம் ஆண்டில் அடைக்கலம் பிள்ளையால் வெளியிடப்பெற்றது. (அந்நூலுடன். 1795 முதல் 1805 வரை ஆண்ட புகழும் பெருமாள் இருங்கோவின் மேல் மதுரகவியால் பாடப்பட்ட விண்ணப்ப மாலையும், சேர்ந் தையாப்புலவர் இயற்றிய அருணசல இருங்கோ பிள்ளைத் தமிழும் சேர்த்து வெளியிடப் பெற்றன), செமுகை யம்மானையின் நடையைப் பார்க்கையில் அதன் காலம் 11-ஆம் நூற்றுண்டுக்கு மிகப் பிற்பட்டதாக இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. நற்குடியார் கொற்கையிலிருந்து செழுவையிற் குடியேறிய காலம் முதல் அவர்கள் அத்தாள நல்லூரில் (கீழே காண்க) குடியேறிய காலம் வரை உள்ள வரலாற்றைப் பற்றிச் செழுகையம்மானை கூறுவது பெரும்பாலும் ந. வே. வ. கூறுவதோடு ஒத்ததாகவே உள்ளது. ஆறுமுக நயினர் பிள்ளை அவ்வளவு விரிவாக விவரித்துள்ள கொற்கை வாழ்க்கைக்கு முற்பட்ட வடநாட்டுக் குடியேற்றம் பற்றிச் செழுகையம்மானை எதுவும் கூறுவதில்லை.

27. இவ்வரலாற்றில் கொடும்பாளூர் இருக்குவேளிரின் இடம் யாது? நற்குடியார் செழுவைக்கு வேறு எங்கிருந்தாவது வந்து குடியேறினரா என்பதே ஆய்வுக்குரியது. அப்படிக் குடியேறியிருந்தனராயினும் அவ்வாறு குடியேறின காலமும் பின்னர் அவர்கள் செழுவையை விட்டு நீங்கிய காலமும் ந. வே. வ. குறிப்பிடும் காலங்களை விட மிகப்பிந்தியவை யாகவே இருக்கவேண்டும், ஆரோக்கியசாமியின் கருத்துப்படி கொடும்பாளூர் மூவர் கோயில் கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ள இருக்குவேளிர் ஆண்டகாலம் கி. பி. 435 முதல் கி, பி 775 முடிய ஆகும். நற்குடியார் செழுவையிற் குடியேறிய காலமும் அவர்கள் அதைவிட்டு நீங்கிய காலமும் முடிவு கட்டப்படவில்லையாகையால் சங்ககால இருங்கோவேளின் வழிவந்தவர்கள் நற்குடியாரா? அல்லது இருக்கு வேளிரா?

கொல்லம் 97-இல் அவர்களிடையே மீண்டும் இரண்டு கட்சிகள் தோன்றின. அப்பொழுது திருநெல்வேலியில் ஆண்டுவந்த

எனக்கூற இயலவில்லை. நற்குடியார் செழுவையை விட்டு கி. பி. 298 - இலேயே வெளியேறிவிட்டது உண்மையாக இருப்பின் அவ்வாறு வெளியேறியவர்களில் வடக்கு நோக்கிச் சென்ற பிரிவினரே இருக்கு வேளிர் ஆயினர் எனலாம். ''மதுரை நாட்டுக் கைநூலில்'' நெல்சன் கூறும் செய்திப்படி பிற்காலப் பாண்டிய மன்னர் காலத்தில் இராமநாதபுரம் வட்டாரத்திலிருந்த வேளாளர் கள்ளராலும் வல்லம்பராலும் விரட்டப்பட்டனர் என்ற செவி வழிச் செய்தி தெரிகிறது. அவ்வாறு விரட்டப்பட்ட பிற்காலத்திலேயே நற்குடியாரும் செழுவையைவிட்டுப் பயணமாயினர் என்பது உண்மையாயின் நற்குடியார் கொடும்பாளூர் இருக்குவேளிரின் வழிவந்தோர் அல்லது அவர்களில் எஞ்சியோர் எனக்கருத இடமுண்டு. ஆனால் நற்குடியாரே இருங்கோவேளின் வழிவந்தோரின் முக்கியமான பகுதியினர் அல்லது இருங்கோவேள் ஆண்ட நாட்டினரின் வழி வந்தோரில் முக்கியமானவர்கள் என்ற யூகம் சரி எனக்கருத ஒரு முக்கிய காரணம் நற்குடியார் இருபதாம் நூற்றாண்டில் அண்மைக்காலம் வரையிலும் தலைமுறை தலைமுறையாகத் தம் சாதித் தலைவருக்கு இருங்கோவேள் எனப் பட்டம் கட்டிவந்த சிறப்பான வழக்கமே ஆகும். ஆரியர் எல்லாத்துறைகளிலும் தமிழர் தனித் தன்மையையொழித்து அனைத்தையும் ஆரிய மயமாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்டுச் செயலாற்றிய காலமாகிய தமிழ்நாட்டின் இருண்ட காலப்பகுதியில் நற்குடியார் தங்கள்முன்னோன் இருங்கோவேள் என்று கூறுவதைவிட மிக எளிதாகத் தங்கள் முன்னோன் தீ, திங்கள் அல்லது ஞாயிறு என்று கூறிக் கொண்டிருக்கலாம்; அல்லது ஏதாவது வடநாட்டு முனி, அல்லது இராமாயணம், மகாபாரதம் அல்லது பிற கழிசடைப்புராணம் ஒன்றின் கதாநாயகன் ஆகியோருக்குக் கனவு வழியிலோ அல்லது இயற்கைக்குப் புறம்பான வழியிலோ பிறந்தவனே தங்கள் முன்னோன் என மிக எளிதாகக் கூறிக்கொண்டிருக்கலாம். அவ்வாறு கூறிக் கொண்டிருந்தால் அவ்விருண்ட காலத்தில் கிடைத்திருக்கக்கூடிய பெருமை இருங்கோவேளின் வழி வந்தோர் எனக் கூறுவதால் கிடைத்ததைவிட அதிகமானதாகவே இருந்திருக்கும். பிற்காலச் சோழர் காலக் கல்வெட்டுக்களில் இளங்கோ-வேள், மூவேந்த வேளான் என்ற பெயர்கள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. அக்காலத்தில் அப்பெயர்கள் அலுவலைக்

பராக்கிரம பாண்டியன் தலையிட்டு இரு கட்சிகளிடையேயும் சமரசம் ஏற்படுத்தினன்.

(தொடரும்)

குறிக்கும் பட்டங்களாகவே எச்சாதியினருக்கும் பயன்படுத்தப் பட்டுவந்ததாகத் தோன்றுகிறது. பிள்ளை என்னும் சாதி அடைமொழியைப் பயன்படுத்தும் பலப்பல சாதியினரில் யாதொன்றை-யும் சேராதவன் கணக்கெழுதும் வேலையில் இருப்பினும் அவனையும் ''கணக்குப் பிள்ளை'' என விளிக்கும் பழக்கத்தை இன்றும் ஊர்களில் காண்கின்றேமன்றே? அதுபோன்றே அக்காலத்தில் அரசு அலுவலருக்கு இளங்கோவேள் போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும். அப்படிப்பட்டப் பட்டங்களால் சோழர் கல்வெட்டுக்களில் அழைக்கப்பட்ட அரசு அலுவலர் அனைவரும் இருங்கோவேள் வழிவந்தவர் என்பது ஏற்புடைத்தன்று; அவர்கள் அனைவரும் வேளிர் அல்லது வேளாளர் என்பது கூட ஏற்புடைத்தன்று. எனவே அவர்களனைவரும் கொடும்பாளூர் இருக்குவேளிர் வழிவந்தவர் என்ற ஆரோக்கியசாமியின் முடிவு பொருத்தமற்றது.

மேற்குச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் சகதேக மல்லனின் சிற்றரசனை இருங்கோளன் என்னும் ஒருவனை 12-ஆம் நூற்றுண்டில் கொய்சள விட்டுணுவர்த்தனன் வென்றான். அந்த இருங்கோளன் தன்னைக் கரிகாற்சோழன் வழிவந்தவன் எனக் கூறிக் கொண்டான், மைசூரில் துமக்கூரு மாவட்டத்தில் சீரு வட்டத்தின் வடவெல்லையில் உள்ள கேமாவதியே அவன் தலைநகரான கெஞ்செரு (அல்லது பெருஞ்செரு — தமிழில் "பெருஞ்செரு") என்பார் ரைஸ். அவன் கோட்டை ஒன்று அம்மாவட்டத்தில் பாவுகடா வட்டத்தில் நடுகல் என்னும் இடத்தில் இருந்தது. (சி, ஹயாவதான ராவ்: மைசூர் கெசட்டியர்; தொகுதி V (கெசட்டியர்); புதிய பதிப்பு, பெங்களூர், 1930, பக்கங்கள் 403 – 4; 1911 — 12-ஆம் ஆண்டின் கல்வெட்டாரய்ச்சி அறிக்கையின் 63-ஆம் பத்தி, 1912 — 13-ஆம் ஆண்டின் கல்வெட்டாராய்ச்சி அறிக்கையின் 49-ஆம் பத்தி ஆகிய வற்றையும் பார்க்கவும்). அவன் இருங்கோவேளுடன் உண்மையில் தொடர்புடையவனு அல்லது பிற்காலச் சோழ அலுவலர் பலரும் பயன்படுத்திவந்த இருங்கோவேள், இருக்குவேள், இளங்கோவேள், மூவேந்த வேளான் போன்ற பட்டங்களில் ஒன்றைத் தானும் பயன்படுத்திக் கொண்டவனு என்பது ஆய்வுக்குரியது.